<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 675 /2023 நாள்: 23.02.2026 வா.சா.–1–செந்திலரசு**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

பிரதிவாதி தவிர வேறு யாருக்கும் நான் கடன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு பிரதிவாதியிடம் அசல் தொகையை வட்டியுடன் எனது மாமா செல்வராஜ் வீட்டில் வைத்து கேட்டேன் தேதி ஞாபகம் இல்லை. எனது மாமா செல்வராஜ் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் நான் நேரடியாக அசல் தொகையை 2, 3 முறை கேட்டுள்ளேன். எந்த தேதியில் 2, 3 முறை நான் கேட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை, பிரதிவாதியிடம் நான் சொல்வது போல் ஒருபோதும் தாவா தொகையை கேட்டது இல்லை, பிரதிவாதி எனக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் வழக்குரையிலும் 27.06.2023ம் தேதி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுங்கள் என்று என்னிடம் சொன்னார் என்று நான் சொல்லியுள்ளேன். நான் மேற்படி காசோலை வழக்கில் உடுமலைபேட்டை நடுவர் நீதிமன்றம் எண் 1ல் 26.07.2023 அன்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு புகாரில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 25.07.2023 அன்ற பிரதிவாதி என்னை சந்தித்து இந்த வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன சொல்லி உள்ள விவரம் எனக்கு தெரியும், மேற்படி விவரத்தை செல்வராஜ் தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பை நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதி பதிலறிவிப்பில் சொன்ன அறிவிப்பை வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். பதிலறிப்பில் சொன்ன முழு விவரம் ஓரளவுக்கு எனக்கு தெரியும். இந்த வழக்கில் அசலும், வட்டியும் சேர்த்து ரூ.11.5 லட்சம் பிரதிவாதி தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கிற்கு செல்வராஜ் தான் நீதிமன்ற கட்டணம் செலுத்தினார் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டின் அடிப்படையில் அசலும், வட்டியும் செலுத்தாத போது எதன் அடிப்படையில் பிரதிவாதியிடம் காசோலை வாங்கினேன் என்றால் பிரதிவாதி கூறிய உறுதியின் அடிப்படையில் வங்கியில் பணம் இருப்பதாக காசோலையை பிரதிவாதியிடம் வாங்கினேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தனலட்சுமி நிறுவனத்தின் ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. மேற்படி ஆவணத்தின் நகலை நான் எடுத்து வழக்கறிஞரிடம் கொடுத்தேன். 1பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் 3வது பிரதிவாதி பெயரும், தங்கவேல் என்பவர் பெயரும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, 3, 4 பிரதிவாதிகள் பெயர்கள் மட்டும் உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள பிறகு தனலட்சுமி ஸ்போர்ட்ஸ் நிறுவனம் சம்பந்தமாக சொத்துகளுக்கு வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றிதழில் 1வது பிரதிவாதி சொத்து சம்பந்தமாக முன் ஜப்தி செய்திருப்பதை தெரிந்து

கொண்டேன். 1வது பிரதிவாதி நிறுவனத்திற்கு தமிழ்நாடு முதலீட்டு கழகம் ரூ.20 லட்சம் கடன் கொடுத்திருப்பது எனக்கு தெரியும். பிரதிவாதிகள் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை அசலையோ, நகலையோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வாங்கிய டிராக்டர், ஜேசிபி நிதி நிறுவத்தில் அடமானத்தில் உள்ளது என்று சொன்னால் ஜேசிபி உள்ளது, டிராக்டர் இல்லை என்று சாட்சி கூறுகிறார். கடனுறுதி சீட்டில் பிரதிவாதி சாட்சிகள் ஆவண எழுத்தர் ஒரே பேனாவில் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். 3வது பிரதிவாதி 07.02.2018ல் நிரப்பப்படாத ப்ரோ நோட்டு, மற்றும் இதர ஆவணங்களை தொலைத்து விட்டார் என்றும், குமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், 21.02.2018 அன்று மடத்துக்குளம் காவல் நிலைய ஆய்வாளர் 3வது பிரதிவாதியை அழைத்து விசாரித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கீழே தொலைந்து போன ஆவணத்தை செல்வராஜ் எடுத்து என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.23 18:45:45 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.